செ.வெ.எண்-35 நாள்-22.07.2021

# பத்திரிக்கைச் செய்தி

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுயமாக தொழில் தொடங்கி வேலைவாய்ப்பினை பெறும் பொருட்டு படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் **(UYEGP)** தமிழக அரசால் உருவாக்கப்பட்டு, தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021-22ம் நிதியாண்டிற்கு அரியலூர் மாவட்டத்திற்கு 300 பயனாளிகளுக்கு ரூ.280 இலட்சம் மானியமாக இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின்கீழ் கடன் பெற குறைந்த பட்ச கல்வித்தகுதி 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொது பிரிவினர் 18வயது முதல் 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். சிறப்புப்பிரிவினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் திருநங்கைகள்) 45 வயதுக்குள் இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.5.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.15.00 இலட்சம் வரையிலும், சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்களுக்கு ரூ.5.00 இலட்சம் வரையிலும் கடன் வழங்கப்படுகிறது. மேலும், பொது பிரிவினர் திட்ட முதலீட்டில் 10 சதவீதமும், சிறப்பு பிரிவினர் (பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் திருநங்கைகள்) 5 சதவீதமும் விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் மானியமாக, அதிகபட்சம் ரூ.1.25 இலட்சம் வழங்கப்படுகிறது.

திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் விண்ணப்பங்களை https://msmeonline.tn.gov.in/uyegp/index.php என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். மேலும், தற்போது **COVID-19** காரணமாக விண்ணப்பங்கள் 30.09.2021 வரையிலான காலத்திற்கு நேர்முக தேர்வின்றி வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், வாலாஜா நகரம், அரியலூர் அலுவலகத்தை நேரடியாகவோ அல்லது 04329-228555, 8925533925, 8925533926 என்ற தொலைபேசி எண் வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**